வடகிழக்குப் பருவமழைக்கு முன்

# சென்னையில் வெள்ளத் தடுப்புப் பணிகளை போர்க்கால அடிப்படையில் முடிக்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!



சென்னை, ஆக. 30-

வடகிழக்குப் பருவமழை தொடங்க உள்ள நிலையில், சென்னையில் மழைநீர் வடிகால் மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகளின் தற்போதைய நிலை குறித்து முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சட்டப்பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:

சென்னையில் 3,014 கிலோ மீட்டர் அளவிற்கு மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த மழைநீர் வடிகால்கள் பருவமழைக்கு முன்பாக மாநகராட்சியால் முழுமையாகத் தூர்வாரப்படுவது வழக்கம். பருவமழை தொடங்கிய பின்னர் டிசம்பர் மாதத்தில் மீண்டும் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**சேதமடைந்த சாலைகளை செப்பனிடுக!**

குறிப்பாக, சமூக ஆர்வலர்கள் மற்றும் தனியார் வானிலை ஆராய்ச்சியாளர்கள், மாறிவரும் எல் நினோ சூழல் காரணமாக 1997 மற்றும் 2015ஆம் ஆண்டுகளை விட சென்னையில் அதிக மழைப்பொழிவு ஏற்படக் கூடும் என்று எச்சரித்துள்ளனர்.

எனவே, சென்னையில் உள்ள கால்வாய்கள் மற்றும் முகத்துவாரங்களை முழுமையாகத் தூர்வாருவதுடன், சேதமடைந்த சாலைகளையும் செப்பனிட்டு பாதுகாக்க வேண்டும். இந்தப் பணிகள் அனைத்தும் பருவமழைக்கு முன்பாக போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கு சுமார் ரூ.2,000 கோடி அளவிற்கு இன்னும் தொகை நிலுவையில் இருப்பதாக அறிகிறேன்.

**வார்டு மேம்பாட்டு நிதி வழங்குவீர்!**

அதேபோன்று, மாநகராட்சியில் மாமன்ற உறுப்பினர்களுக்கான வார்டு மேம்பாட்டு நிதியும் இன்னும் விடுவிக்கப்படவில்லை. இதனைக் கண்டித்து மாமன்ற உறுப்பினர்கள் கருப்பு உடை அணிந்து மாநகராட்சி கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

எனவே, அரசு உடனடியாக போதிய நிதியை வழங்கி, நிலுவையில் உள்ள மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகள், கால்வாய் தூர்வாரும் பணிகள் மற்றும் சாலை சீரமைப்புப் பணிகள் அனைத்தையும் வடகிழக்குப் பருவமழைக்கு முன்பாக போர்க்கால அடிப்படையில் முடிக்க வேண்டும் என்று பேரவைத் தலைவர் வாயிலாக அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசினார்.



சென்னை வடகிழக்கு மாவட்டப் பிரதிநிதி ஆர்.நரேந்திர குமார் என்கிற ரஜினிபாபுவின் மகள் வழக்கறிஞர் ஹரிணி – சாய் எசஸ்வி ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி திருவொற்றியூரில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை வகித்தார். பகுதி செயலாளரும், மண்டல குழுத் தலைவருமான தி.மு.தனியரசு வரவேற்புரையாற்றினார். விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளர், கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

நேற்று விசில், இன்று துடைப்பம்.. நாளை எதுவோ

# முதல்வரை சந்திக்கும் வரை தீவிரமாகும் தூய்மை பணியாளர்கள் போராட்டம்!

## ரிப்பன் மாளிகை முன்பு 10வது நாளாக தொடர்வதால் பதற்றம்; 100 நாட்கள் ஆனாலும் போராட்டம் தொடரும் என அறிவிப்பு!

சென்னை, ஆக. 30-

முதல்வர் விஜய் தங்களை நேரில் சந்திக்க வேண்டும் என பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராடி வரும் தூய்மைப் பணியாளர்கள் நேற்று 10-வது நாளாக துடைப்பம் எடுத்து போராட்டத்தை தொடர்ந்து வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



தூய்மை பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்வது, மகப்பேறு விடுப்பு, கழிப்பறை மற்றும் ஓய்வறை வசதிகள், சம்பளத்துடன் கூடிய வார விடுமுறை வழங்க வேண்டும் உள்ளிட்ட ஒன்பது அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி உழைப்போர் உரிமை இயக்கம் சார்பில் கடந்த 10 நாட்களாக பல்வேறு விதமான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கிடையே தூய்மை பணியாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலிக்கும் வகையில், சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள ஆணையர் அலுவலகத்தில் ஆணையர் சமீரன் தலைமையில் கடந்த 23-ஆம் தேதி பேச்சு வார்த்தை நடைபெற்றது.

**குண்டுகட்டாக கைது!**

ஆனால், இந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவுற்றது. இதனைத் தொடர்ந்து, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள முதல்வர் அலுவலகத்தை முற்றுகையிடும். போராட்டத்தை முன்னெடுத்தனர். அதை தொடர்ந்து, தண்டையார்பேட்டை 4ஆவது மண்டல அலுவலகத்தை முற்றுகையிட்டு தூய்மைப் பணியாளர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் குண்டுக்கட்டாக கைது செய்தது பதற்றத்தை ஏற்படுத்தியது.

அப்போது, காவல் துறையினர், அவர்களை வாகனத்தில் ஏற்றி அங்கிருந்து அப்புறப்படுத்தினர். இதனால் போலீசார் மற்றும் தூய்மைப் பணியாளர்களிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதையடுத்து, சென்னை மாநகராட்சி வளாகத்தில் நடத்திய 6-வது நாள் போராட்டத்தின் போது, மின்சாரத்தை அதிகாரிகள் துண்டித்தனர்.

இதனால் செல்போன் வெளிச்சத்தில் போராட்டம் நடத்தினர்.

அதை தொடர்ந்தும், தூய்மை பணியாளர்களின் போராட்டம் தொடர்ந்து வருகிறது. போராட்டக்காரர்கள் தரப்பில்,"எங்களுடைய கோரிக்கை நிறைவேற வேண்டும். அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். முதல்வர் விஜய் எங்களைச் சந்திக்க வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து அரசுத் தரப்பில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் நடத்திய முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்ததால், தங்களின் நியாயமான கோரிக்கைகள் முதல்வரின் கவனத்திற்குச் செல்லும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனத் தூய்மைப் பணியாளர்கள் தெரிவித்திருந்தனர்.

**கேட்குதா? கேட்குதா? முதல்வருக்கு கேட்குதா?**

இதற்கிடையே, தூய்மைப் பணியாளர்கள் ரிப்பன் மாளிகை முன்பு நேற்று முன்தினம் 9-வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, விசில் அடித்து வினோதமான முறையில் தங்களது போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர்.

இப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், "கேக்குதா? கேக்குதா? முதல்வருக்கு கேக்குதா?. நாங்கள் மவுனமாக இருந்தால் எங்கள் கோரிக்கைகள் யாருக்கும் கேட்காது, முதல்வர் விஜய் எங்களை நேரில் சந்தித்துப் பேசும் வரை நாங்கள் இந்த இடத்தை விட்டு நகர மாட்டோம்" எனக் கூறி, விசில்களைத் தொடர்ந்து ஊதி தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

இந்நிலையில் நேற்று காலை சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை முன்பு கூடிய தூய்மை பணியாளர்கள் தமிழக அரசை கண்டித்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது துடைப்பத்தால் பெருக்கி த.வெ.க. அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த அங்கு மீண்டும் பதற்றம் நிலவியுள்ளது. பாதுகாப்பு கருதி போலீசார் குவிக்கப்பட்டனர். போராட்டக்காரர்கள் வெளியேற முடியாத வகையில் பேரிகார்டுகள் போட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து போராட்டக்காரர்கள் கூறியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சரின் தேர்தல் வாக்குறுதியின்படி பணி நிரந்தரம் வேண்டும். அரசு ஊழியர்கள் 3வது குழந்தை பெற்றுக் கொள்ள ஒரு ஆண்டு மகப்பேறு விடுப்பு வழங்கப்படுகிறது. ஆனால், தூய்மை பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு வழங்க முடியாது என மாநகராட்சி ஆணையர் கூறுகிறார். இது நியாயமான மற்றும் சரியான நிலைப்பாடு அல்ல. கடந்த ஆண்டு நாங்கள் போராட்டம் நடத்திய போது த.வெ.க. தலைவராக இருந்த விஜய், நாங்கள் கேட்கும் கோரிக்கைகளை வாக்குறுதிகளாக கொடுத்தார்.

இப்போது முதல்வராக வந்துவிட்டார், அவர் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளைத் தான் நிறைவேற்றக் கேட்கிறோம். இப்போது வரை எங்களை சந்திக்க அவர் நேரம் ஒதுக்கவில்லை. தொடர்ந்து 10 நாட்களாக போராடி வரும் எங்களை சந்திக்க முதல்வர் மறுக்கிறார். இதை கண்டித்து விசில் அடித்தும், துடைப்பத்தை தூக்கியும் போராட்டம் நடத்தி வருகிறோம். நாளைக்கு என்னென்ன எடுப்போம் என்று எங்களுக்கே தெரியவில்லை.

எனவே, எங்கள் குரலுக்கு முதல்வர் செவி சாய்த்து கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வர வேண்டும். முதல்வர் எங்களை சந்திக்கும் வரை 100 நாட்கள் ஆனாலும் எங்கள் போராட்டத்தை நாங்கள் கைவிடமாட்டோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# கரூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



கரூர், ஆக. 30-

கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கரூர் மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் இன்று (30.08.2026 - ஞாயிற்றுக் கிழமை) காலை 11.00 மணிக்கு கரூர் மாவட்ட கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில் கரூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெற உள்ளது.

அதுசமயம் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

பொருள்:

1.22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமை செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் கழகம் மறுசீரமைப்பு குறித்து

2. கழக வளர்ச்சி பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

## வடக்கு மாவட்ட தி.மு.க.வினருக்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி வேண்டுகோள்!



மதுரை, ஆக.30-

தலைமை கழக அறிவிப்பின்படி கட்சி நிர்வாகிகள் தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தக் கூட்டம் தமிழகத்திலேயே முதலாவதாக மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி தலைமை வகித்து தலைமைக் கழக உத்தரவுப்படி தேர்தல் பணியை மேற்கொள்ள வேண்டும் என அறிவுரை வழங்கினார்

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக தலைமைச் செயற்குழு கூட்ட முடிவின்படி கட்சியில் அமைப்பு ரீதியாக 110 மாவட்டங்களாக பிரித்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன்படி மதுரை மாவட்டத்தில் தலா 2 சட்டப்பேரவை தொகுதிகள் இடம் பெறும் வகையில் 5 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இம் மாவட்டங்களில் கட்சியின் மறு சீரமைப்பு குழு அளித்த பரிந்துரைப்படி நகர், ஒன்றிய, பேரூராட்சி, வார்டு, பகுதி என கிளை அமைப்புகளை பூகோள ரீதியாக பிரித்து 15 நாட்களுக்குள் விபரங்களை அளிக்க வேண்டும் என கட்சி தலைமை நேற்று தான் உத்தரவிட்டது. கட்சி தலைமையினால் அனுப்பப்படும் நிர்வாகிகள் முன்னிலையில் இப்பணிகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திருப்பாலையில் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.மூர்த்தி தலைமையில் நடந்தது. கூட்டத்திற்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், தமிழரசன், மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கரு தியாகராஜன், தனச்செல்வம், சேகர், மாநில அணி நிர்வாகிகள் ஜி.பி.ராஜா, கணேசன், வழக்கறிஞர் கலாநிதி, கலை கார்த்திகேயன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்

கூட்டத்தில் பேசிய மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி கழகத் தலைவரின் உத்தரவுப்படி நிர்வாகிகள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். நிர்வாகிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு கட்சி தலைமை குறிப்பிட்டபடி வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பகுதிகளை பிரிக்க வேண்டும். அது தொடர்ச்சியான பகுதிகளாக இருக்க வேண்டும். தேர்தல் மூலமே கட்சி நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளதால், உண்மையான களப்பணியாளர்கள்தான் பொறுப்புக்கு வர முடியும். பதவி வேண்டும் என விரும்புபவர்கள் கட்சி தொண்டர்கள், விசுவாசிகள், கீழ்மட்ட நிர்வாகிகளின் ஆதரவை பெறும் வகையில் திறம்பட பணியாற்றி வெற்றி பெறும் வழியை காண வேண்டும். தமிழகத்திலேயே முதல் கூட்டத்தை நாம்தான் இந்த ஆலோசனை கூட்டத்தை நடத்தியுள்ளோம். கட்சி தலைமையின் உத்தரவை செயல்படுத்துவதில் மதுரை வடக்கு மாவட்டம் எப்போதும் முதன்மையாக இருக்கும் என்பதை இந்த தேர்தல் பணியிலும் காட்ட வேண்டும். அனைவருக்கும் வழிகாட்டியாக இருந்து, கட்சி தலைமையின் உத்தரவை 100 சதவீதம் சரியாக நிறைவேற்றித்தர வேண்டும். இதற்கு நிர்வாகிகள் முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும்.

விரைவில் கட்சி தலைமை அனுப்பும் நிர்வாகி தலைமையில் அடுத்த கூட்டம் நடக்கும். அப்போது பகுதிகளை பிரிக்கப்பட்டதற்கான பட்டியலை ஒப்படைக்க தயாராக இருக்க வேண்டும் என்றார்

மேலும் இக்கூட்டத்தில் திரளான கழக நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.



கழக இளைஞரணி அறக்கட்டளை சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதியில் வசிக்கும் கழக முன்னோடி கோ.கா.முத்துச்சாமிக்கு மருத்துவ செலவிற்காக 25,000 ரூபாய்க்கான காசோலையை அனுப்பி வைத்தார். அதனை ஈரோடு வடக்கு மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் நேரில் சென்று வழங்கினார். நிகழ்வில் இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் திருவேங்கடம், கோபிசெட்டிபாளையம் நகரச் செயலாளர் என்.ஆர்.நாகராஜ் ஆகியோர் உடன் உள்ளனர்.

காரம்பாக்கம் கணபதி தலைமையில் மதுரவாயல் தெற்கு பகுதி 150வது வட்ட

# பகுதி பிரதிநிதி காந்தி நகர் இரா.சீனிவாசன் இல்ல மணவிழா!

## கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன் – ஆர்.எஸ்.பாரதி வாழ்த்துரை!



சென்னை, ஆக.30

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி 150வது வட்ட பகுதிப் பிரதிநிதி காந்தி நகர் இரா. சீனிவாசன் சீ.மஞ்சுளா ஆகியோரின் புதல்வர் சீ.ஆகாஷ், பி.ஏ.லட்சுமிநாராயணன் ல.தாரா ஆகியோரின் புதல்வி கே.எல்.தீபிகாஸ்ரீக்கும் நாளை (31.8.2026 திங்கள் கிழமை) காலை 9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் சென்னை பரணி புத்தூர், மாங்காடு ரோட்டில் அமைந்துள்ள சக்தி பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

முன்னதாக இன்று (30.8.2026 ஞாயிற்றுக் கிழமை) மாலை 6.00 மணியளவில் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரும் மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி தலைமை தாங்குகிறார்.

தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாச்சலம், மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, வ.செல்வகுமார் எம்.சி., ஹேமலதா கணபதி எம்.சி., வட்டச் செயலாளர் சி.சுந்தர், வட்டக் கழக நிர்வாகிகள் மு.ஆறுமுகம், க.கைலாசம், இரா. ராஜேந்திரன், எல்.அருள், இ.ஜெயவேல், எஸ்.தில்லைவாணன், ஆர்.லதா, இரா.ரமேஷ், வி.ஜெகநாதன், ஜி.சீனிவாசன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மா.பா. சித்ராலயம், ச.ரவி, வி.ஸ்டாலின், என்.துரை, பா.வே.சந்திரசேகர், கி.ஜெயவேல், ஆர்.கோவிந்தசாமி, சி.எம்.தாமோதரன், கே.சம்பத், நாயுடுபாளையம் ஜி.குப்பாராமன், வேம்பி நாராயணன், பி.கருப்பையா, ஜெ.ஞானகிராமன், வி.அமுதவல்லி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இவ்விழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டக் கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் அமைச்சர் பா.பென்ஜமின், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ப.ரங்கநாதன், ஆ.கிருஷ்ணசாமி, எம்.கே.மோகன், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, கே.கே. நகர்.க.தனசேகரன், எஸ்.அப்துல் காதர், எம்.எஸ்.கலைமணி, வீர கனிமொழி, காயத்திரிஸ்ரீதர், ச.சங்கர் கணேஷ் எம்.சி., சீ.பாலமுருகன், எஸ்.பி.அருள், அ.விஜய பாலா, செ.ரவி, பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால் பாண்டியன், எஸ்.பாரதி எம்.சி., க.ராஜீ எம்.சி., எம்.எல்.. நாதன், தினகரன், சண்முகம், ஜெமிலா பாண்டுரங்கன், லோகநாயகி சாமிநாதன், பாண்டுரங்கன், எஸ்.ராஜா தேசிங்கு, டி.எஸ்.எம்.ஜெயகரன், சாரதி, பெரியநாயகம், எஸ்.ஜனார்த்தனன், எஸ்.தணிகைவேல், எஸ்.கார்த்திக், எம்.கோதண்டம், காட்டுப்பாக்கம் புகழேந்தி, வட்டக் கழக செயலாளர்கள் எஸ்.ரமேஷ் ராஜ், த.ரமேஷ், அ.மோசஸ், ஜெ.பாஸ்கரன், தி.சார்லஸ், ஆ.செல்வம், மாமன்ற உறுப்பினர்கள் செல்வி ரமேஷ், சாந்தி ராமலிங்கம், மாவட்ட பிரதிநிதிகள் வி.விஜயன், ரா.சேகர், எஸ்.ரவி, ஏ.டி.எத்திராஜ், ஜி.ராமகிருஷ்ணன், கே.நாராயணன், ஆர்.சிவலிங்கம், ஜி.ராமலிங்கம், ஜெ.ஏ.துரை, நரேன் கணபதி, அ.கவுஸ் பாஷா, எம்.செல்லதுரை, எஸ்.நித்தியானந்தம், எஸ்.சண்முகசுந்தரம் மற்றும் அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இறுதியாக அ.மோகன்ராம், ராகேஷ் அன்பழகன் ஆகியோர் நன்றி உரையாற்றுகின்றனர்.